இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023

பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

வள்ளலார் திருவருட்பா தெலுங்கு மொழிபெயர்ப்பு - பன்முகப்பார்வை
Vallalar Thiruvarutpa Telugu Translation - Multiview

சத்தியராஜ் தங்கச்சாமி | Sathiyaraj Thangasamy

தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 042
Assistant Professor in Tamil, Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 641 042
9600370671, sathiyarajt@skacas.ac.in
https://orcid.org/0000-0002-6754-9095
DOI: 10.5281/zenodo.10222658

ஆய்வுச்சுருக்கம்

வள்ளலாரின் உலகியல் பார்வையும் உயிரியல் பார்வையும் மாறுபட்டவை. வாடிய பயிரைக் கண்டபொழுதெல்லாம் வாடினேன் எனப் பாடும்பொழுது அறிவு அடிப்படையில் குறைந்து நிற்கும் உயிர்களுக்குக் கூட மதிப்பளித்துள்ளார் வள்ளலார் எனத் தோன்றும். ஆனால் மனித சமுதாயம் உணவின்றித் தவிப்பதையும் பார்த்து வருந்துகின்றார் எனும் கருத்து இவ்விடத்து நிலவுவதை அறியலாம். இந்திய மொழிகளில் தெலுங்கு மொழியில் அவரின் திருவடிப் புகழ்ச்சி மொழிபெயர்ப்பு அமைந்திருக்கும் தன்மை குறித்துச் சுட்டிக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது. இந்த ஆய்வுக் கட்டுரை இணையத் தரவுகளை முதன்மையாகக் கொள்கின்றது.

Abstract: Vallalar's worldview diverges from a purely biological perspective. It appears that Vallalar extended his respect even to living beings experiencing a decline in knowledge, as reflected in his statement, "Whenever I saw a withered crop, I withered." However, it is acknowledged that there is an interpretation suggesting that his concern also encompasses the human society's struggle for sustenance. This viewpoint has been articulated in Indian languages, specifically in the context of the 'Tiruvadi Pugazhchi' translation in Telugu. This research paper primarily centers on web data to explore and analyze Vallalar's perspectives and their linguistic expressions in various Indian languages.

திறவுச்சொற்கள் (Keywords): வள்ளலார், திரு அருட்பா, தெலுங்கு, தமிழ், மொழிபெயர்ப்பு, இணையம், தரவு, திருவடிப் புகழ்ச்சி.

முன்னுரை

இன்றைய காலக்கட்டத்தில் இணையம் என்பது அனைவரும் பயன்படுத்தி வரும் பொதுப் பயன்பட்டாக மாறிவிட்டது. அச்சுநூலிற்கு அளிக்கக்கூடிய முக்கியத்துவத்தைக் காட்டிலும் இணையம் அல்லது மென்படித் (Soft copy) தரவுகளுக்கே அதிக முக்கியத்துவம் தருகின்றனர். மென்தரவுகளே (Soft data) அறிவியல்முறை சார்ந்த ஆய்வுகளுக்கு உறுதுணையாக அமைகின்றன. தரவாக்கத்திற்கும் (Data creation) நல்குகின்றன இணையத் தரவுகள் (Online data) எனில் மிகையில்லை. ஆகையால் அதை நோக்கிய பார்வையாக இவ்வாய்வு அமைந்து, வள்ளலாரின் "திருவடிப் புகழ்ச்சி" சிந்தனைகள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் பாங்கினையும் திருஅருட்பா.காம் எனும் இணையதளத்

தரவுகளின் மொழிபெயர்ப்பு முறையினையும் எடுத்து இயம்புவதாக இக்கட்டுரை அமைகின்றது.

வள்ளலார் திருஅருட்பா - அறிமுகம்

திருவருட்பா, வள்ளலாரால் பாடப்பெற்ற 5818 பாடல்களின் தொகுப்பாகும். இப்பாடல் ஆசிரிய விருத்த நடையில் அமைந்துள்ளது. இப்பாடல்கள் ஆறு தொகுப்புகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்புகள் திருமுறை எனவும் அவரது தொண்டர்களால் வழங்கப்படுகின்றன. எனினும் சைவத்திருமுறைகளான பன்னிரண்டு திருமுறைகள் என்பன வேறு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்பாடல்கள் வள்ளலாரின் அனுபவங்களையும் ஆன்மீகப் பெரு உணர்வையும் விளம்புவன. அவற்றை வணிக முறையில் பதிப்பிக்க வேண்டாம் என்றும் வள்ளலார் கேட்டுக்கொண்டார். எனினும், வள்ளலாரின் தொண்டர்கள் அவரிடம் தொடர்ந்து வலியுறுத்தி இப்பாடல்களைப் பதிப்பிப்பதற்கான அனுமதியைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது (விக்கிப்பீடியா).

வள்ளலார் படைப்புகளின் மொழியாக்க முயற்சிகள்

அச்சுநூலின் வழியாக வெளிவந்துள்ள படைப்புகள் எந்த மொழிகளுக்கு உரியதென ஆய்தல் வேண்டும். இணையத் தரவுகளில் வள்ளலாரின் படைப்புகளை அறிந்திட 'வள்ளலார், இராமலிங்க அடிகளார், திருவருட்பா, vallalar, Ramalinga Adigalar, Thiruvarutpa' போன்ற குறிச்சொற்கள் கொடுத்துக் கூகுள் தேடுபொறியில் தேடிப் பார்த்தால் பல தளங்கள் அறிய வருகின்றன. சான்றாகப் பின்வரும் இரு தளங்களைக் காட்டலாம்.

1. https://ta.wikipedia.org/s/a4
2. https://www.vallalar.org/tamil

இத்தளங்களுள் திருவருட்பா.காம் எனும் தளத்தில் இடம்பெற்றுள்ள மொழிபெயர்ப்புக் குறித்து அறிவோம்.

வள்ளலார் படைப்புகள் - தெலுங்கு மொழியாக்கம்

வள்ளலாரின் படைப்புகளுள் திருமுறை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ஆகிய படைப்புகள் மட்டும் திருவருட்பா.காம் தளத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவை தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, அரபு, ரோமன் I, ரோமன் II ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இம்மொழிகளுள் தெலுங்கு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வள்ளலாரின் படைப்புகளின் பட்டியல் பின்வருமாறு அமைந்துள்ளது.

- முதல் திருமுறை
- இரண்டாம் திருமுறை
- மூன்றாம் திருமுறை
- நான்காம் திருமுறை
- ஐந்தாம் திருமுறை
- ஆறாம் திருமுறை

இவற்றுள் முதல் திருமுறையில் உள்ள பாடுபொருளை மட்டும் நோக்குவோம்.

வள்ளலார் திருஅருட்பா - முதல் திருமுறை - தெலுங்கு மொழியாக்கம்

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023
பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

வள்ளலார் திருஅருட்பா தமிழ் மூலத்தில் உள்ள முதல் திருமுறையில்,

திருவடிப் புகழ்ச்சி tiruvaṭi pugazhchi
விண்ணப்பக் கலிவெண்பா viṇṇappak kaliveṇpā
நெஞ்சறிவுறுத்தல் neñsaṟivuṟuttal
சிவநேச வெண்பா sivanēsa veṇpā
மகாதேவ மாலை makātēva mālai
திருவருண் முறையீடு tiruvaruṇ muṟaiyīṭu
வடிவுடை மாணிக்க மாலை vaṭivuṭai māṇikka mālai
இங்கித மாலை iṅkita mālai

என அமைந்துள்ளன. அவை தெலுங்கில்,

తిరువటిప్ పుకళ్చ్చి tiruvaṭi pugazhchi
విణ్ణప్పక్ కలివెణ్పా viṇṇappak kaliveṇpā
నెఞ్చఱివుఱుత్తల్ neñsaṟivuṟuttal
సివనేస వెణ్పా sivanēsa veṇpā
మకాతేవ మాలై makātēva mālai
తిరువరుణ్ ముఱైయీటు tiruvaruṇ muṟaiyīṭu
వటివుటై మాణిక్క మాలై vaṭivuṭai māṇikka mālai
ఇఙ్కిత మాలై iṅkita mālai

என அமைந்துள்ளன. இவற்றுள், திருவடிப்புகழ்ச்சி குறித்து இனி அறிவோம்.

திருவடிப் புகழ்ச்சி - தெலுங்கு மொழிபெயர்ப்பு: நோக்குநிலை

மொழிபெயர்ப்பு என்பது திரும்பப் படைத்தல் எனும் தன்மையது. அதனுள் படைப்பாளரின் கொள்கை, அதிகாரம், அழகியல், அணுகுமுறை போன்றன கலந்து அமைவதற்கு வாய்ப்புண்டு. எவ்வாறிருப்பினும் படைப்பு அனுபவத்தை அடைந்து மகிழ்தல் எனும் ஒன்றை மையமாகக் கொண்டிருப்பது மொழிபெயர்ப்பு என இரவீந்தரநாத் தாகூர் கருதுவதாக க.பஞ்சாங்கம் கூறுகின்றார் (மொழியாக்கமெனும் படைப்புக்கலை, ப.110)[2]. அதுமட்டுமின்றி மொழியாக்கப் படைப்புக்கலை குறித்து இரவீந்தரநாத் தாகூர் கூறும்,

> 'உங்களுடைய இந்த மொழிபெயர்ப்புகள் மறுபிறவி எடுத்தவை போலத் தோன்றுகின்றன. கவிதை ஆன்மா ஒரு உடம்பில் இருந்து மற்றொரு உடம்புக்குள் புலம் பெயர்ந்துள்ளது. மொழிபெயர்ப்பு என்பது ஒரு தொழில்நுட்பச் செயல்பாடல்ல; மாறாக அது ஒரு படைப்புச் செயல்பாடு' (ப.111)[2]

இக்கருத்து உன்னிப்பாக நோக்கத்தக்கது. இனி மொழிபெயர்ப்பு வகைகள் குறித்து அறியலாம்.

மொழியாக்க வகைகள்

மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலை. இருமொழிப் புலமை அல்லது பன்மொழிப் புலமை இருக்கும் பொழுது அது சிறப்புடன் அமைவதைக் காணலாம். அப்படிப்பட்ட மொழிபெயர்ப்பு சில வகைகளை உள்ளடக்கியது. அதனைப் பின்வரும் கருத்துக்கள் மூலம் அறியலாம்.

1. "ஒரே மொழிக்குள் நடைபெறும் உரைவளமும் ஒருவகை மொழிபெயர்ப்பு.
2. மொழி விட்டு மொழி மாற்றுவதே சரியான மொழிபெயர்ப்பு.
3. எழுத்து வடிவத்திற்கு நாட்டிய வகையில் அபிநயம் பிடிப்பதும் ஒருவகையான மொழிபெயர்ப்பு.

எனச் சிலர் கூறுகின்றனர் என்று வீ.சந்திரன் தனது மொழிபெயர்ப்பியல் அணுகுமுறைகள் என்ற நூலில் கூறிச் செல்லுகிறார். எந்நிலை அமையினும் மொழிபெயர்ப்பு என்று கூறுவதை விட மொழி ஆக்கம் என்று கூறப்படுவதே சரியென மா. சண்முக சுப்பிரமணியன் போன்றோர் கருதுகின்றனர்.

பொதுவாக மொழிபெயர்க்கும் பாணியில் மொழிபெயர்ப்பு ஆறு வகைகளாகப் பகுக்கப்படும். அவை வருமாறு:

சொல்லுக்குச் சொல் பெயர்த்தல் (Literal And Metaphrase Translation)
விரிவான மொழிபெயர்ப்பு (Amplification)
முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு (Close or Accurate Translation)
சுருக்கம் (Paraphrase or Abridgement)
தழுவல் (Adaptation)
மொழியாக்கம் (Transcreation)" [6]

என ஜோஸப்பின் டோரதி (தமிழ் இணையப் பாடம்) குறிப்பிடுவார். கா.சாகுல்ஹமீது தனது தமிழில் கவிதை மொழிபெயர்ப்பு எனும் நூலில் ஆண்டரே லெஃபவரெ என்பவரின் மொழிபெயர்ப்பு ஆய்வு குறித்துச் சுட்டிக்காட்டியுள்ளார். அதில் ஏழுவகை மொழிபெயர்ப்பைக் காணலாம். அவை வருமாறு;

14. ஒலியன் மொழிபெயர்ப்பு(Phonemic Translation)
15. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு (Literal Translation)
16. யாப்பு மொழிபெயர்ப்பு (Meterical Translation)
17. உரைநடை மொழிபெயர்ப்பு (Prose Translation)
18. சந்தமொழிபெயர்ப்பு(Rhyming Translation)
19. விடுநிலைப்பா மொழிபெயர்ப்பு(Blank Verse Translation)
20. விளக்கமொழிபெயர்ப்பு(Interpretation) (ப.41) [1]

இருப்பினும் மூன்று நிலையான மொழிபெயர்ப்பு வகைகளை மட்டும் அறிவோம்.

ஒலிபெயர்ப்பு (Transliteration)

மூலமொழியின் ஒலிப்பினைப் பெறுமொழியின் ஒலிப்பில் எழுதும் முறையை ஒலிபெயர்ப்பு (transliteration) எனப்படுகின்றது. சான்றாக "அ" எனும் தமிழ் எழுத்தை "a" என ஆங்கிலத்திலும் అ எனத் தெலுங்கிலும் எழுதலாம். "உனக்காக" எனும் தமிழ்ச் சொல்லை "unakkaaga" என ஆங்கிலத்திலும் "ఉనక్కాగ" எனத் தெலுங்கிலும் எழுதிக் கொள்ளலாம். இவ்வாறு மொழிபெயர்க்கும் பொழுது,

> 'மூலமொழியின் ஒலியைப் பெறுமொழியில் தரமுயல்வது ஒலியன் மொழிபெயர்ப்பாகும். இம்மொழிபெயர்ப்பு மூலமொழியின் உணர்ச்சிப் பொருளைச் சிதைத்துவிடும் தன்மை கொண்டதாகும்.' (பக்.40-41) [1]

எனக் கூறுவது கவனிக்கத்தக்கது.

மொழிபெயர்ப்பு (Translation)

மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியின் சொல்லைப் பெறுமொழியின் சொல்லமைப்பில் எழுதும் முறைக்கு மொழிபெயர்ப்பு (translation) எனப்படுகின்றது. சான்றாக "உனக்காக" எனும் தமிழ்ச் சொல்லை "for you" என ஆங்கிலத்திலும் "మీ కోసం (மீ கோஸம்)" எனத் தெலுங்கிலும் ஆக்கிக் கொள்ளலாம். இவ்வாறு மொழிபெயர்ப்பைச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல் எனும் வகைக்குள் அடக்கிப் பார்க்கலாம்.

மொழியாக்கம் (Transcreation)

மேற்சொன்ன இரண்டு நிலைகளிலும் மாறுபட்டது மொழியாக்கம் எனும் செயல்பாடு. இது மூலமொழியின் தொடரைப் பெறுமொழியின் தொடரமைப்பில் எழுதும் முறையை மட்டுமின்றி, பெறும் மொழியின் மொழியமைப்பிற்கு ஏற்பப் பெயர்த்து எழுதும் முறை மொழியாக்கம் (trans-creation) எனப்படுகின்றது. சான்றாக "உனக்காகவே நான் வாழ்கின்றேன்." எனும் தமிழ்த்தொடரை "I live for you" என ஆங்கிலத்திலும் "నీ కోసమే జీవిస్తున్నాను (நீ கோஸமே ஜீவிஸ்தந்நாநு - உனக்காகவே வாழ்கிறேன்)" எனத் தெலுங்கிலும் ஆக்கிக் கொள்ளலாம்.

யாப்பு மொழிபெயர்ப்பு

இது இந்தக் கட்டுரையுடன் நேரடித் தொடர்புடையது. ஆகையால் அம்மொழிபெயர்ப்புக் குறித்து அறியலாம்.

> 'மூலநூலின் செய்யுளில் உள்ள அடி, சீர், தளை போன்றவற்றைப் பெறுமொழியில் அதே நிலையில் மாற்றியமைக்கும் முறையை யாப்பு மொழிபெயர்ப்பு என்பர். இவ்வகை மொழிபெயர்ப்பு யாப்பில் மட்டும் கவனம் செலுத்துவதால் மூலபாடத்தின் முழுமைத் தன்மையிலிருந்து விலகிவிடுகிறது எனலாம்.' (சாகுல், ப.41) [1]

> 'செய்யுள் மொழிபெயர்ப்பின் வகைகளைப் பகுத்துக்கூறும் ஆண்ட்ரே லெஃபவெரே. மூலநூலுக்கும் மொழிபெயர்ப்புக்கு மிடையே உள்ள ஒட்டுமொத்த முழுமைத் தன்மையை ஆராய்ந்து பார்க்காமல், பல்வேறு கூறுகளைத் தனித்தனியே ஆய்வு செய்துள்ளார். இதனால் கருத்தையும், வடிவத்தையும் பிரிக்க முடியும் என்ற வாதத்தை உருவாக்கிவிட்டார். லெஃபவெரேயின் இவ்வகைப்பாட்டைக் குறைகூறும் போப்போவிக் என்னும் மொழிபெயர்ப்பியல் அறிஞர். "மொழி பெயர்ப்பாளருக்கு மூலநூலின் ஒட்டுமொத்தக் கட்டமைப்பிலிருந்து வேறுபடும் உரிமையும், சுதந்திரமும் உண்டு. எப்பொழுதென்றால், மூலநூலின் கவிதையை உயிரோட்டத்தோடு மொழிபெயர்க்கும் பொழுது" என்கிறார்.' (சாகுல், ப.42)[1]

ஆக மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளை உள்வாங்கி இவ்வாய்விற்கு உட்படுத்தி மொழிபெயர்க்கவில்லை இவ்வாய்விற்கு உட்படுத்தும் தளம். இவ்வாய்வு அந்தத் தளத்தினைக் குறை கூறுவதற்காக எழுதப்படவில்லை. மாறாக வருங்காலத்தில் மேம்படுத்திக் கொள்ளவேண்டும் எனும் நோக்கின் அடிப்படையில்தான் சில கருத்துக்கள் முன்வைக்கப்பெறுகின்றன.

திருவடிப் புகழ்ச்சி - தெலுங்கு ஒலிபெயர்ப்புமுறை

திருஅருட்பா தளத்தில் பின்வருமாறு தமிழ் மூலம் அமைந்துள்ளது.

> பரசிவம்சின்மயம் பூரணம் சிவபோக பாக்கியம் பரமநிதியம்
> பரசுகம் தன்மயம் சச்சிதா னந்தமெய்ப் பரமவே காந்தநிலயம்
> பரமஞா னம்பரம சத்துவம கத்துவம் பரமகை வல்யநிமலம்
> பரமதத் துவநிரதி சயநிட்க ளம்பூத பௌதிகா தாரநிபுணம்

இந்த மூலத்தினை அடிப்படையாக வைத்துத் தெலுங்கு ஒலிபெயர்ப்பு அமைந்துள்ளது. அது வருமாறு.

> పరసివంసిన్మయం పూరణం సివపోక పాక్కియం పరమనితియం
> పరసుకం తన్మయం సస్సితా నందమెయ్ప్ పరమవే కాందనిలయం
> పరమఞా నంపరమ సత్తువమ కత్తువం పరమకై వల్యనిమలం

పరమతత్ తువనిరతి సయనిట్క ళంపూత పౌతికా తారనిపుణం

இவ்வாறு மூலமொழியிலிருந்து பெறுமொழிக்கு மொழிபெயர்த்திருப்பது தேவையான ஒன்றாக இருக்கின்றது.

திருவடிப் புகழ்ச்சி - மொழிபெயர்ப்பில் செய்திருப்பன

திருவடிப் புகழ்ச்சியைத் தெலுங்கில் மொழிபெயர்க்க வேண்டும் எனும் நோக்கத்திற்காக மொழிபெயர்த்திருப்பது போல் தெரிகின்றது. எழுத்துப் பெயர்ப்பிலாவது தந்திருப்பது பாராட்டுக்குரியது.

திருவடிப் புகழ்ச்சி - மொழிபெயர்ப்பில் செய்திருக்க வேண்டியன

ஒலிபெயர்ப்புடன் சுருக்கமாகத் தெலுங்கில் விளக்கம் அளித்திருக்க வேண்டும். அது ஒரு குறையாக அமைந்துவிட்டது. அதைச் சரிசெய்ய வேண்டிய சில குறிப்புகளைப் பின்வருமாறு அறியலாம்.

மூலம்

பரசிவம்சின்மயம் பூரணம் சிவபோக பாக்கியம் பரமநிதியம்
பரசுகம் தன்மயம் சச்சிதா னந்தமெய்ப் பரமவே காந்தநிலயம்
பரமஞா னம்பரம சத்துவம கத்துவம் பரமகை வல்யநிமலம்
பரமதத் துவநிரதி சயநிட்க ளம்பூத பௌதிகா தாரநிபுணம்[7]

கூகுள் மொழிபெயர்ப்பு

పరశివంసిన్మయం పురాణం శివపోక పాఖ్యం పరమానిదీయమ్ ||
పరశుగం ధన్మయం సచిత నందమైప్ పరమవే కంఠ నిలయం
పరమంజ నంబరమ సత్తువమ కథువం పరమగై వల్యనిమలమ్
పరమదత్ దువనిరతి సయనిద్క లమ్భూత బౌతిక ధరణిపుణం

தளத்தில் உள்ள மொழிபெயர்ப்பு

పరసివంసిన్మయం పూరణం సివపోక పాక్కియం పరమనితియం
పరసుకం తన్మయం సస్సితా నందమెయ్ప్ప పరమవే కాందనిలయం
పరమఞా నంపరమ సత్తువమ కత్తువం పరమకై వల్యనిమలం
పరమతత్ తువనిరతి సయనిట్క ళంపూత పౌతికా తారనిపుణం[7]

சி.சாவித்ரி - ஒலிபெயர்ப்பு

పరశివం చిన్మయం పూరణం శివభోగ
భాగ్యం పరమ నిత్యం
పరసుఖం తన్మయం సచ్చిదా
నంద మెయ్ పరమవేకాంత నిలయం
పరమ జ్ఞానం పరమ సత్వ మహత్వం
పరమ కైవల్య నిమలం
పరమ తత్వ నిరతిశయ నిక్కళంభూత
భౌతికా ధార నిపుణం

இம்மூலப்பாடலுக்குரிய தமிழ் விளக்கத்துடன்,

பாடலடி :-

பரசிவம் - சின்மயம் - பூரணம் சிவபோக பாக்கியம் - பரம நிதியம்

பொருள் :-

திருவடி மேலான சுபத்தைத் தருகின்ற பொருள், ஞான உருவம், பூரண நிறைவு, சிவானுபவமாகிய செல்வம், மேலான அருட்செல்வமுடையது.

பாடலடி :-

பரசுகம் தன்மயம் சச்சிதானந்தம் மெய்ப் பரம ஏகாந்த நிலையம்

பொருள் :-

மேலான இன்பம், பரசொரூபம், என்றும் உள்ள பொருள், அதன் ஒளி, அதன் இன்பம், மேலான தனியிட மானது.

பாடலடி :-

பரமஞானம் பரமசத்துவம் மகத்துவம் பரம கைவல்ய நிமலம்

பொருள் :-

மேலான அறிவு, மேலான சத்துவ குணம், பெருமை, கைவல்யமாகிய பரிசுத்த வஸ்த்துவானது.

பாடலடி:-

பரமதத்துவம் நிரதிசயம் நிட்களம் பூத பௌதிகா தார நிபுணம்

பொருள்:-

மேலான உண்மைப் பொருள், தனக்கு மேல் ஒன்றில் லாதது, உருவமில்லாதது, பஞ்ச பூதங்களாகிய பௌதிகங்களுக்கு ஆதாரமாய் இருக்கின்ற கூர்த்த நுட்பமுடையது. (4) [7]

இப்பாடலுக்குரிய விளக்கத்துடன் தெலுங்கு மொழிபெயர்ப்பைக் கூகுள் லென்சு தருவதைக் காண்க.

పరశివం - చిన్మయం - పురాణం శివపోక
పరమ నిధి ధన్యమైనది
తిరువడి అత్యంత పవిత్రమైన వస్తువు, జ్ఞాన స్వరూపం, పరిపూర్ణమైన నెరవేర్పు, శివుని సంపద, మహోన్నతమైన అరుద్సెల్వం.
పరశుగం ధన్మయం సచ్చితానందం మెయిప్ పరమ ఏకాంత స్టేషన్
అత్యున్నతమైన ఆనందం, స్వరూపం, శాశ్వతమైన పదార్థం, దాని కాంతి, దాని ఆనందం, అత్యున్నత వ్యక్తిత్వం.
పరమజ్ఞానం పరమసత్తువ మాగత్తువ పరమ కైవల్య నిమలమ్
ఉన్నతమైన జ్ఞానము, అధిక సత్వగుణము, అహంకారము, ఉన్నతమైన చేతిపనులు పవిత్రమైన వస్తువు.
పరమధత్తువం నిరతిశయం నిద్కలం భూత బౌతిక తార నిపుణం
తనకు తానే అంటిపెట్టుకోని, నిరాకారమైన అత్యున్నతమైన నిజమైన వస్తువు, పంచ బుద్ధులయిన భౌతిక జీవులకు మూలమైన కుర్తా తంత్రం. (4)

கொள்வோர் - கொடையோர்: திருவடிப் புகழ்ச்சி

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023
பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

திருவடிப் புகழ்ச்சி மொழிபெயர்ப்பை கொள்வோர் யார்? இந்நிலையில் இம்மொழியாக்கம் என்பது ஒரு வெற்றிடப் பரப்பையே உள்ளடக்கியுள்ளது.

கொள்வோர் - மனநிலை

இம்மொழியாக்கத்தைக் கொள்வோரின் மனநிலையானது மூலமொழியின் படைப்பை அறிந்து கொண்டோம் எனும் நிலையே நிலவும். ஆனால் முழுமையாக அறிந்துகொண்டோமா என்ற நிலையில் வெற்றிடமே நிலவும். சமசுகிருதச் சொற்களைத் தானே வள்ளலார் பயன்படுத்துகின்றார் என எண்ணலாம். ஆனால் அதிலும் பின்தங்கிய நிலையே நிலவுகின்றது.

கொடையோர் - மனநிலை

இந்த மொழிபெயர்ப்பின் மூலம் மூலமொழியாளர் பெறுமொழிக்கு ஒரு கருத்துச் சென்றுவிட்டது என்ற மனநிலையே மேலோங்கும் என்பதை உணரலாம்.

நிறைவுரை

இந்த ஆய்வு, ஒரு மொழிபெயர்ப்பானது சிறப்பாக அமைய வைத்திருக்க வேண்டிய அளவீடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளதோடு திருஅருட்பா.காம் தளத்தில் அமைந்துள்ள தெலுங்கு மொழிபெயர்ப்பின் தன்மையைச் சுட்டிக்காட்டியுள்ளது.

Bibliography

1. சாகுல்ஹமீது கா., (2004), தமிழில் கவிதை மொழிபெயர்ப்பு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.
2. திசை எட்டும் மொழியாக்கக் காலாண்டிதழ், ஏப்ரல் - ஜூன் 2013, குறிஞ்சிப்பாடி.
3. Thiruarutpa Homepage - https://www.thiruarutpa.org/Thirumurai/First/telugu, last accessed 2023/11/14
4. Wikipedia Homepage - https://ta.wikipedia.org/s/6n3, last accessed 2023/11/14
5. TamilWiki Homepage - https://tamil.wiki/wiki//திருவருட்பா#மூன்றாம்_திருமுறை8, (இதை அடிப்படையாக வைத்துத் தெலுங்கு மொழிபெயர்ப்பு அமைந்திருக்கலாம்), last accessed 2023/11/14
6. TamilVU Homepage - https://www.tamilvu.org/library/l5F31/html/l5F31ind.htm, last accessed 2023/11/114
7. TamilVU Homepage - https://www.tamilvu.org/library/l5F31/html/l5F31i31.htm (இந்தப் பதிப்பும் மகாலிங்கம் பதிப்பும் மூன்றாம் திருமறையில் முதல் திருமறையாக அமைந்துள்ளது.), last accessed 2023/11/14